# பாடம் 26: திருவழிபாட்டு ஆண்டு & நாள்காட்டி

**விசுவாசத்தைக் கற்பிப்போருக்கான அறிவுறுத்தல்**

அடிப்படை நிலை (8 வயது) : 1 முதல் 10 கருத்துகளைக் கற்பிக்கவும்
இடைப்பட்ட நிலை (11 வயது) : 1 முதல் 10 கருத்துகளைக் கற்பிக்கவும்
மேம்பட்ட நிலை (14 வயது) : 1 முதல் 15 கருத்துகளைக் கற்பிக்கவும்

**முந்திய பாடத்தில் இருந்து மீள்பார்வை:**
முந்திய பாடத்தில், ஒரே, தூய, கத்தோலிக்க, திருத்தூதுவத் திருச்சபை என்றால் என்ன என்பதை நாம் கற்றோம். இந்த திருச்சபை தனது மணவாளர் இயேசு கிறிஸ்து திரும்பி வருவதற்காகக் காத்திருக்கும் வேளையில், கிறிஸ்துவில் கவனத்தைக் குவித்து இந்த மண்ணகத்தில் தனது வாழ்வை வாழ்ந்து வருகிறாள். இதன் காரணமாகவே, திருச்சபை ஒவ்வொரு திருவழிபாட்டு ஆண்டிலும் பல பருவங்களைக் கடந்து செல்கிறாள், ஒவ்வொரு பருவமும் கிறிஸ்துவின் மண்ணக வாழ்வின் ஒரு குறிப்பிட்ட அம்சத்தை மையப்படுத்தியதாக இருக்கிறது. இந்த பாடத்தில், திருவழிபாட்டு ஆண்டு மற்றும் நாள்காட்டி பற்றி நாம் கற்போம்.

**தற்போதைய பாடம்:**
1. காலந்தோறும், தூய கத்தோலிக்கத் திருச்சபை கிறிஸ்து நமது மீட்புக்காகச் செய்தப் பணியை நினைவுகூருகிறது. அதனோடு, தற்போது கடவுளோடு இருந்து, நமக்காகப் பரிந்து பேசுகின்றப் புனிதர்களையும் நாம் நினைவுகூருகின்றோம். இந்த நினைவுகூரல், பல்வேறு பருவங்களைக் கொண்டத் திருவழிபாட்டு நாள்காட்டியைப் பயன்படுத்தி நிகழ்கிறது. இந்த வேறுபட்டப் பருவங்களை உள்ளடக்கிய ஒரு முழு ஆண்டே திருவழிபாட்டு ஆண்டு என அழைக்கப்படுகிறது.

*திருவழிபாட்டு ஆண்டு மற்றும் நாள்காட்டி பற்றிய உலகளாவிய விதி*, 1: ‘‘தூய திருச்சபை ஆண்டின் குறிப்பிட்ட நாள்களில் கிறிஸ்துவின் மீட்புப் பணியை புனித நினைவுகூரலோடு கொண்டாடுகிறது. ஒவ்வொரு வாரமும், ஆண்டவரின் நாள் என்று அழைக்கப்படும் நாளில், ஆண்டவரின் உயிர்த்தெழுதலை திருச்சபை நினைவுகூருகிறது, ஆண்டுக்கு ஒருமுறை அவரது பேறுநிறை பாடுகளோடு இணைத்து, அதை பாஸ்கா பெருவிழாவாகவும் கொண்டாடுகிறது. உண்மையில், ஆண்டு முழுவதும் கிறிஸ்துவின் முழுமையான மறைபொருளை வெளிக் கொணர்வதுடன், புனிதர்களின் பிறந்தநாள்களையும் கடைபிடிக்கிறது.’’

2. திருவழிபாட்டு ஆண்டு ஒரு பருவச் சுழற்சியையும் ஒரு புனிதருக்கான சுழற்சியையும் கொண்டுள்ளது, அவை முறையே *காலத்தின் தகைவு* மற்றும் *புனிதர்களின் தகைவு* என்று அழைக்கப்படுகின்றன. இரண்டும் ஒருங்கிணைக்கப்பட்டு, திருவழிபாட்டு நாள்காட்டியில் வெளியிடப்பட்டுள்ளன, அது தேசிய, மறைமாவட்ட, பங்கு அளவிலான, அல்லது துறவறச் சமூகத்தின் தலத் திருச்சபைக்குத் தகுந்த பல்வேறு கடைபிடிப்புகளால் வளப்படுத்தப்படுகிறது. இயேசு கிறிஸ்துவின் பாஸ்கா மறைபொருள் -- அவரது பாடுகள், இறப்பு, மற்றும் உயிர்ப்பு -- அவரது வாழ்க்கை நிகழ்வுகளையும், பேறுநிறை கன்னி மரியா மற்றும் புனிதர்களின் விழாக்களையும் கொண்டாடுவதன் வழியாக தொடர்ந்து அறிவிக்கப்பட்டு, புதுப்பிக்கப்படுகிறது. (*திருவழிபாட்டு ஆண்டு மற்றும் நாள்காட்டி பற்றிய உலகளாவிய விதி*, 49)

3. திருவழிபாட்டு ஆண்டு ஆறு பருவங்களைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது:
அ) திருவருகை காலம்: இயேசுவின் பிறப்பு கொண்டாட்டத்திற்கு முந்திய நான்கு வாரத் தயாரிப்பு;
ஆ) கிறிஸ்து பிறப்பு காலம்: இயேசு கிறிஸ்துவின் பிறப்பு மற்றும் உலக மக்களுக்கான அவரது வெளிப்பாட்டை நினைவுகூரல்;
இ) தவக்காலம்: உயிர்ப்புக்கு முன்பு தவத்திற்கான ஆறு வாரக் காலம்;
ஈ) பாஸ்கா முந்நாள்கள்: இயேசுவின் பாடுகள், இறப்பு, மற்றும் உயிர்ப்பைக் கிறிஸ்தவர்கள் நினைவுகூரும் திருச்சபையின் திருவழிபாட்டின் தூய ‘‘மூன்று நாள்கள்’’;
உ) உயிர்ப்பு காலம்: இறந்தோரிடம் இருந்து ஆண்டவர் உயிர்த்தெழுந்ததையும், அவர் தூய ஆவியாரை அனுப்பியதையும் மகிழ்ச்சியுடன் கொண்டாடும் 50 நாள்கள்;
ஊ) பொதுக்காலம்: இயேசு தமது மக்களிடையே ஆற்றியப் போதனைகள் மற்றும் பணிகளின் முழுமையை விசுவாசிகள் உணரும் இக்காலம் (முதலாவது கிறிஸ்து பிறப்பு காலத்திற்குப்

பிறகு நான்கு முதல் எட்டு வாரங்கள், அடுத்து உயிர்ப்பு காலத்திற்குப் பிறகு ஆறு மாதங்கள் அளவுக்கு என) இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

4. ஒவ்வொரு திருவழிபாட்டு ஆண்டும் திருச்சபையால் ஒருங்கமைக்கப் பெற்று, இறுதியாக திருவழிபாட்டு நாள்காட்டியில் சேர்க்கப்பட்டுள்ளது. திருவழிபாட்டு நாள்காட்டியைத் இறுதி செய்வதில் திருச்சபை சில முக்கிய வழிகாட்டுதல்களைக் கடைபிடிக்கிறது:

அ) இரண்டாம் வத்திக்கான் சங்கம் ஞாயிற்றுக்கிழமைக்குப் புதுப்பித்த அழுத்தம் கொடுத்து ஒரு தனித்துவமான திருவழிபாட்டு வகைமையாகக் கொணர்ந்தது: ‘‘ஆண்டவரின் நாள் உண்மை விழா நாளாக இருக்கிறது’’ (சாக்ரோசான்க்டம் கொன்சீலியம், 106), மேலும் அது ‘‘அடிப்படையான தூயக் கடன் திருநாளாக உலகளாவியத் திருச்சபையில் கடைபிடிக்கப்பட வேண்டும்’’ (திருச்சபை சட்டம், 1246 §1). ஆகவே, குறிப்பிட்ட எண்ணிக்கையில் மட்டுமே ஆண்டவரின் அல்லது புனிதர்களின் விழாக்கள் ஞாயிறு கொண்டாட்டத்தை மாற்ற முடியும்.

ஆ) புனிதர்கள் மற்றும் பிற கொண்டாட்டங்கள் ஒவ்வொன்றும் அதற்குரிய முக்கியத்துவத்தின் அடிப்படையில் வேறுபடுத்தப்படுகின்றன: பெருவிழா, விழா, அல்லது நினைவு. ஞாயிறுகள் மற்றும் பெருவிழாக்கள் அவற்றின் கொண்டாட்டங்களை முந்திய நாள் மாலையிலேயே தொடங்குகின்றன, விழாக்களும் நினைவுகளும் ஒரு நாளில் கொண்டாடப்படுகின்றன, மேலும் நினைவுகள் கடனுக்குரியவை அல்லது விருப்புக்குரியவையாக இருக்கின்றன.

இ) இறுதியாக, கடன் திருநாள்கள் (கருத்தூன்று விழாக்கள்) என்பவை விசுவாசிகள் திருப்பலியில் பங்கேற்கும் கடமை கொண்ட, தேவையற்ற வேலை அல்லது உடல் மற்றும் மனதின் இளைப்பாறுதலுக்குத் தடங்கலான மற்றச் செயல்பாடுகளில் இருந்து விலகியிருக்கும் நாட்களாகும். ஒவ்வொரு ஞாயிறும் ஒரு கடன் திருநாளாகும், மேலும் மலேசியா, சிங்கப்பூர், புருனே பகுதியில் நான்கு பெருவிழாக்கள் கடன் திருநாள்களாக கடைபிடிக்கப்படுகின்றன. அவை, ஆண்டவரின் பிறப்பு (டிசம்பர் 25), ஆண்டவரின் விண்ணேற்றம் (உயிர்ப்பு ஞாயிறுக்குப் பிறகு 40ஆம் நாள்), பேறுநிறை கன்னி மரியாவின் விண்ணேற்பு (ஆகஸ்ட் 15), மற்றும் அனைத்து புனிதர்கள் (நவம்பர் 1).

5. **திருவருகை காலம்** (திருவழிபாட்டு நிறம்: ஊதா). திருச்சபையின் திருவழிபாட்டு ஆண்டின் தொடக்கமாக அமைந்துள்ளது, திருவருகை காலம் (லத்தீனில் *அத்-வெனிரே* என்பதிலிருந்து வருகிறது, அதற்கு ‘‘வருவது’’ என்று பொருள்) என்பது கிறிஸ்து பிறப்பு கொண்டாட்டத்துக்கு இட்டுச் செல்லும் நான்கு ஞாயிறுகளை (மற்றும் வாரநாட்களை) உள்ளடக்கியப் பருவம்.

திருவருகை காலம் என்பது காலத்தின் முடிவில் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை மற்றும் கிறிஸ்துமஸ் விழாவில் ஆண்டவரின் பிறப்பை நினைவை நோக்கி நமது இதயங்களையும் மனங்களையும் நடத்திச் செல்லும் தயாரிப்பின் காலமாக இருக்கிறது. திருவருகை காலத்தின் டிசம்பர் 17 முதல் டிசம்பர் 24 வரையிலான இறுதி நாட்கள், நமது ஆண்டவரின் பிறப்பு கொண்டாட்டங்களுக்கான நமது தயாரிப்பில் குறிப்பாக கவனம் செலுத்துகின்றன.

திருவருகை தளிர்வளை உள்ளிட்ட, திருவருகை கால பக்தி முயற்சிகள் நமக்கு இந்தப் பருவத்தின் பொருளை நமக்கு நினைவூட்டுகின்றன. வட்டமாக பசுமையான கிளைகளைக் கொண்டு அமைக்கப்படும் திருவருகை தளிர்வளையில் செருகப்பட்ட நான்கு மெழுகுதிரிகள், திருவருகை காலத்தின் நான்கு வாரங்களைக் குறிக்கின்றன. பொதுவாக மூன்று ஊதா மற்றும் ஒரு இளஞ்சிவப்பு மெழுகுதிரிகள் இருக்கின்றன, ஆனால் வெள்ளை மெழுகுதிரிகளையும் பயன்படுத்தலாம். ஊதா மெழுகுதிரிகள் குறிப்பாக செபம், தவம், மற்றும் இக்காலத்தில் தயாரிப்பாகச் செய்கின்ற ஒறுத்தல்களையும் நற்செயல்களையும் அடையாளப்படுத்துகின்றன. இளஞ்சிவப்பு மெழுகுதிரி மூன்றாம் ஞாயிறான, அக்களிப்பு ஞாயிறன்று ஏற்றப்படுகிறது, அப்போது அருள்பணியாளரும் இளஞ்சிவப்பு உடுப்பை அணிகிறார். விசுவாசிகள் திருவருகை காலத்தின் மையப்புள்ளிக்கு வந்துள்ளதை, அவர்களின் பாதி தயாரிப்பு முடிந்து, அவர்கள் கிறிஸ்து பிறப்புக்கு நெருக்கமாக இருக்கிறதைக் காட்டுவதாக கவ்தேத்தே ஞாயிறு எனப்படும் அக்களிப்பு ஞாயிறு இருக்கிறது. திருவருகை காலத்தின் ஒவ்வொரு வாரமும் கூடுதலாக ஒரு மெழுகுதிரியை ஏற்றுவது, நமது ஆண்டவர் இவ்வுலகிற்கு முதலில் வந்ததைச் சுற்றியுள்ள எதிர்பார்ப்பு மற்றும் எதிர்நோக்கையும், வாழ்வோரையும் இறந்தோரையும் தீர்ப்பிடுவதற்கான அவரது இரண்டாம் வருகைக்கான முன்னோக்கையும் அடையாளப்படுத்துகிறது.

6. **கிறிஸ்து பிறப்பு காலம்** (திருவழிபாட்டு நிறம்: வெள்ளை). கிறிஸ்து பிறப்பு விழாவானது, உயிர்ப்பு விழாவுக்கு அடுத்து மிக முக்கிய நாட்களில் ஒன்றாக இருக்கிறது. இது கடவுள் மனிதரான விழாவாக, மனித உடலேற்பின் (லத்தீனில் *கார்னே* என்பதற்கு ''ஊனேற்றல்'' என்று பொருள்) விழாவாக இருக்கிறது. இது ஒரு தனித்துவமான கிறிஸ்தவ போதனை, இறைவன் நம்மில் ஒருவராய் ஆவதைத் தேர்ந்து கொண்டார். இந்த நம்பிக்கையின் காரணமாக, கடவுள் நம்மைக் கடந்தவராக மட்டுமின்றி, முழுமையாக நம்மிடையே, இம்மானுவேலாக (''கடவுள் நம்மோடு'') இருக்கிறார். அவர் நம்மைக் கடந்தவராக (அவரை அடைய நமது நிலையை நாம் மேல் நோக்கி உயர்த்த வேண்டும்) இருந்து கொண்டே, அதே நேரத்தில் அவர் நம்மிடையே இருக்கிறார் (நாம் அவரை நோக்கி உயரும்போது அவர் நம்மோடு இருக்கிறார்). ஒவ்வொரு நற்கருணை கொண்டாட்டமும் கிறிஸ்து பிறப்பைப் போன்றது, அங்கு அப்பமும் திராட்சை ரசமும் அவரது சதையாக, அவரது உடல் மற்றும் குருதியாக உருமாறுகின்றன, ஒரு விதத்தில் அவர் பலிபீடத்தில் ''புதிதாகப் பிறக்கிறார்''.

திருவழிபாட்டு ஆண்டில் கிறிஸ்து பிறப்பு காலம் கிறிஸ்து பிறப்பின் முன்மாலை திருவிழிப்புத் திருப்பலியில் தொடங்கி ஆண்டவரின் திருமுழுக்கு விழாவில் முடிவடைகிறது. இப்பருவத்தில், நமது உலகிலும் நமது இதயங்களிலும் கிறிஸ்துவின் பிறப்பை நாம் கொண்டாடுகிறோம், மேலும் அவர் நமக்காக இறப்பதற்கே பிறந்தார் என்ற உண்மையை உள்ளடக்கிய, அவரோடு பிறந்த மீட்பின் கொடையைச் சிந்திக்கிறோம்.

கிறிஸ்துமஸ் மரமும் குடிலும் இப்பருவத்தின் வெகுமக்கள் அடையாளங்களாக மற்றும் பல கிறிஸ்தவ வீடுகளில் மரபாக இருக்கின்றன. தந்தையாம் கடவுள் தம் ஒரே மகனை உலகிற்கு கொடையாக அளித்ததைப் பெருமைப்படுத்தும் விதமாக, குடும்பத்தினர் மற்றும் நண்பர்களோடு கிறிஸ்துமஸ் பரிசுகளைப் பரிமாறிக்கொள்வதும் மரபாக இருக்கிறது. கிறிஸ்துவைக் கொடையாகப் பெற்றுள்ளதால், நமது அன்புக்குரியவர்களோடு அந்தக் கொடையைப் பகிர நாம் இயல்பாகவே விரும்புகிறோம்.

7. **தவக்காலம்** (திருவழிபாட்டு நிறம்: ஊதா). தவக்காலத்தின் பொழுது, செபத்தில் மற்றும் மறைநூலை வாசிக்கிறதில் ஆண்டவரைத் தேடவும், தருமம் வழங்குவதில் சேவை செய்யவும், நோன்பின் வழியாக தற்கட்டுப்பாட்டைப் பயிலவும் நம்மை அர்ப்பணிக்க கேட்கப்படுகிறோம். தவக்கால வெள்ளிக்கிழமைகளில் இறைச்சியைத் தவிர்க்கும் மரபைப் பலரும் அறிந்துள்ளனர், ஆனால் இப்பருவம் முழுவதும் தன்னொழுக்கம் மற்றும் நோன்பை மற்ற வழிகளில் நடைமுறையாக்கவும் நாம் அழைக்கப்படுகிறோம்.

கூடுதலாக, தருமம் வழங்குதல் என்பது கடவுளின் கொடைகளைப் பகிரும் ஒரு வழியாகும் - பணத்தை வழங்குவதில் மட்டுமன்று, நமது நேரத்தையும் திறமைகளையும் பகிர்வதன் வழியாகவும் இதைச் செய்யலாம். புனித யோவான் கிறிசோஸ்தம் நமக்கு நினைவூட்டுவது போன்று: ''நமது பொருட்களில் ஏழைகள் பங்குகொள்ள இயலாமல் ஆக்குவது, அவர்களிடம் இருந்து திருடுவதும் அவர்களின் வாழ்வைப் பறிப்பதுமாக அமையும். நாம் வைத்துள்ளப் பொருட்கள் நம்முடையவை அல்ல, மாறாக அவர்களுடையவை... எல்லாவற்றிலும் முதலாவது நீதிக்கானக் கோரிக்கைகள் நிறைவு செய்யப்பட வேண்டும்; அதாவது ஏற்கெனவே நீதியில் குறைவுபடுவது பிறரன்பின் கொடையாக வழங்கப்படக் கூடாது'' (கதிம 2446).

தவக்காலத்தில், திருமுழுக்கு பெற்றோர் தங்களது திருமுழுக்கின் அர்ப்பணத்தைப் புதுப்பிக்க அழைக்கப்படுகின்றனர், அதே வேளையில் வயது வந்தோருக்கான கிறிஸ்தவப் புகுமுகச் சடங்கின் வழியாக மற்றவர்கள் திருமுழுக்கிற்குத் தயாரிக்கின்றனர், கத்தோலிக்கராய் ஆகின்ற ஆவலை வெளிப்படுத்தியத் தனிநபர்களுக்கான கற்றல் மற்றும் தெளிதேர்வின் காலமாக இது அமைகிறது. இந்த நடைமுறைகளைக் கனிதரும் விதத்தில் கடைபிடிப்பதற்கு, திருமுழுக்கு புதுப்பித்தலுடனான தங்களது இணைப்பைக் கண்டுணர்வது முக்கியமாகும். தவக்காலத்தில் பாவத்தில் இருந்து விலகியிருக்க மட்டுமன்று, மாறாக கிறிஸ்துவைப் பின்பற்றுவோராக நமது இதயங்கள் மற்றும் மனங்களின் உண்மையான மாற்றத்திற்கும் நாம் அழைக்கப்பட்டுள்ளோம். கிறிஸ்துவின் இறப்பிற்குள், பாவத்திற்கும் தீமைக்கும் இறந்து, கிறிஸ்துவுக்குள் புது வாழ்வைத் தொடங்கியத் திருமுழுக்கின் தண்ணீரை நாம் நினைவுகூருகின்றோம்.

தவக்காலத்தில் தங்கள் ஆன்மிக வாழ்வின் ஒரு முக்கியப் பகுதியாக ஒப்புரவிற்குச் செல்ல (இது தவக்காலத்திற்கு மட்டுமே உரிய நடைமுறை அன்று என்றாலும்) கத்தோலிக்கர்கள் மிகவும் ஊக்குவிக்கப்படுகின்றனர். மறைமாவட்டங்கள் அடிக்கடி இந்த அருளடையாளத்தை, சிறப்பாக தவக்காலத்தில் வழங்க வேண்டும்.

8. **உயிர்ப்பு காலம்** (திருவழிபாட்டு நிறம்: வெள்ளை). திருவழிபாட்டு ஆண்டின் உச்சமாக உயிர்ப்பு முந்நாள் - புனித வியாழன் மாலையில் இருந்து உயிர்ப்பு ஞாயிறு திருவிழிப்பு வரை இருக்கிறது. அவை காலமுறையில் மூன்று நாட்களாக இருந்தாலும், திருவழிபாட்டில் கிறிஸ்துவின் பாஸ்கா மறைபொருளின் ஒருமையை நமக்கு வெளிக்காட்டும் ஒரே நாளாகக் கருதப்படுகின்றன. இந்த முந்நாளின் ஒற்றைக் கொண்டாட்டம் தவக்காலத்தின் முடிவைக் குறிக்கிறது, மேலும் உயிர்ப்பு திருவிழிப்பில் ஆண்டவரின் உயிர்ப்பு திருப்பலிக்கு இட்டுச் செல்கிறது. முந்நாளின் பொழுது நிகழும் திருவழிபாட்டு நிகழ்வுகளாவன: ஆண்டவரின் இரவுணவு திருப்பலி, ஆண்டவரின் பாடுகளின் புனித வெள்ளி, மற்றும் ஆண்டவரின் உயிர்ப்பு திருப்பலி.

உயிர்ப்பு திருவிழிப்பானது ‘‘எல்லா திருவிழிப்புகளின் அன்னையாக’’ இருக்கிறது. உயிர்ப்பு ஞாயிறே, எல்லா ஞாயிறுகளிலும் சிறந்ததாக இருக்கிறது, மேலும் உயிர்ப்பு காலமானது எல்லா திருவழிபாட்டு காலங்களிலும் மிகவும் முக்கியமானது. உயிர்ப்பு காலம் ஆண்டவர் இறப்பில் இருந்து உயிர்த்தெழுந்ததன் கொண்டாட்டமாக இருக்கிறது, தந்தையிடம் அவரது விண்ணேற்றம் மற்றும் திருச்சபை மீது தூய ஆவியை அனுப்பியதில் உச்சத்தை அடைகிறது. உயிர்ப்பு காலத்தில் முதல் ஞாயிறில் இருந்து பெந்தக்கோஸ்து வரை ஐம்பது நாட்கள் இருக்கின்றன. எல்லாவற்றை விட, மாட்சியுற்ற வாழ்வு மற்றும் இறப்பின் மீதான வெற்றியின் களிப்பு இதன் பண்புநலனாக இருக்கிறது, கிறிஸ்தவக் கூக்குரலின் பெரும் ஆரவாரத்தால் இது முழுமையாக வெளிப்படுகிறது: அல்லேலூயா! எல்லா விசுவாசமும் உயித்தெழுதலில் உள்ள விசுவாசத்தில் இருந்து வழிந்தோடுகிறது: ‘‘கிறிஸ்து உயிர்த்தெழவில்லை என்றால், எங்கள் போதனையும் உங்கள் விசுவாசமும் பொருளற்றதாய் இருக்கும்’’ (1 கொரிந்தியர் 15:14).

உயிர்ப்பு எண்கிழமை எட்டு நாட்களைக் கொண்டுள்ளது, அது முதலாம் ஞாயிறு முதல் இரண்டாம் ஞாயிறு வரை நீண்டுள்ளது. தொடக்க நாளின் களிப்பை நீட்டிப்பதற்கான வழியாக இது இருக்கிறது. ஒரு விதத்தில், எண்கிழமையின் ஒவ்வொரு நாளும் ஒரு சிறிய உயிர்ப்பு ஞாயிறைப் போன்றது.

‘‘ஈஸ்டர்’’ எனும் சொல் பழைய ஆங்கிலத்தில் இருந்து வருகிறது, அதற்கு ‘‘கிழக்கு’’ என்பதே எளிய பொருள். கிழக்கில் உதிக்கின்றக் கதிரவன், ஒளி, வெப்பம், மற்றும் எதிர்நோக்கைக் கொணர்கிறது, அது உலகின் ஒளியாக இருக்கின்ற உயிர்த்த கிறிஸ்துவின் அடையாளமாக கிறிஸ்தவர்களுக்கு உள்ளது. பாஸ்கா மெழுகுதிரி இந்த இறை ஒளியான கிறிஸ்துவின், மைய அடையாளமாக இருக்கிறது. இது உயிர்ப்பு காலம் முழுதும் வாசகப்பீடத்தின் அருகில் வைக்கப்பட்டு, எல்லா திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களிலும் ஏற்றப்படுகிறது.

5. **பொதுக்காலம்** (திருவழிபாட்டு நிறம்: பச்சை). கிறிஸ்து பிறப்பு மற்றும் உயிர்ப்பு காலங்கள் பாஸ்கா மறைபொருளின் மைய மறைபொருள்களான இயேசு கிறிஸ்துவின் மனித உடலேற்பு, சிலுவைச் சாவு, உயிர்ப்பு, விண்ணேற்றம், மற்றும் பெந்தக்கோஸ்து நாளில் தூய ஆவியாரின் வருகை ஆகியவற்றை முன்னிறுத்துகின்றன. மறுபுறத்தில், பொதுக்காலத்தின் ஞாயிறுகளும் வாரநாட்களும் கிறிஸ்துவின் வாழ்வு வழியாக நம்மை நடத்துகின்றன. இது மனமாற்றத்தின் காலமாகவும், கிறிஸ்துவின் வாழ்வை வாழ்வதாகவும் இருக்கிறது.

பொதுக்காலம் என்பது வளர்ச்சி மற்றும் முதிர்ச்சிக்கான காலமாகும், எல்லா பொருள்களும் இறுதியாக கிறிஸ்துவில் ஒன்றிணையும் வரை, கிறிஸ்துவின் மறைபொருளை எப்போதை விடவும் மிக ஆழமாக வரலாற்றுக்குள் ஊடுருவ அழைக்கும் ஒரு காலமாக இருக்கிறது. வரலாறு அனைத்தையும் முன்னோக்கி இயக்குகின்ற இலக்கு, பொதுக்காலத்தின் இறுதி ஞாயிறில் அமைந்துள்ளது, நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து, அனைத்துலக அரசர் பெருவிழா.

(1 முதல் 9 வரையான கருத்துகள் அமெரிக்க கத்தோலிக்க ஆயர் பேரவையின் திருவழிபாட்டு நாள்காட்டி பற்றியக் குறிப்பில் இருந்து எடுக்கப்பட்டவை.)

10. சமயக் கொண்டாட்டங்களின் பொழுது கத்தோலிக்க அருள்பணியாளரின் திருவழிபாட்டு உடுப்புகள் மற்றும் அவர்கள் பயன்படுத்தும் பல புனித உடுப்புகளும் திட்டமான அடையாளப் பொருள் கொண்ட நிறங்களால் வேறுபடுகின்றன. அந்த திருவழிபாட்டு உடுப்புகளின் நிறங்கள் திருவழிபாட்டு காலத்தை அல்லது தற்போதைய திருவிழா தருணத்தைச் சுட்டுகின்றன. 1969ல் திருத்தந்தை 6ம் பவுலால் வகுக்கப்பட்ட நான்கு திருவழிபாட்டு நிறங்கள் ரோமை ரீதியில்

இருக்கின்றன: வெள்ளை, பச்சை, சிவப்பு மற்றும் ஊதா. இவற்றோடு கூடுதலாக, இளஞ்சிவப்பு மற்றும் பொன்னிறம் போன்றவையும் (உலகின் சில பகுதிகளில், கருப்பு மற்றும் வெளிர்நீலம் ஆகியவையும்) சில சிறப்பு தருணங்களில் திருமுறை நிறங்களுக்கு மாற்றாகத் திருவழிபாட்டு உடுப்புகளில் பயன்படுத்தப்படுகின்றன.

*வெள்ளை* விசுவாசத்தின் விளைவான களிப்பு மற்றும் தூய்மையை அடையாளப்படுத்துகிறது. தற்போதைய திருவழிபாட்டு பருவம் அல்லது கொண்டாட்டத்தைச் சாராமல், ஒவ்வொரு நாளும் குருக்களால் பயன்படுத்தப்படும் திருவழிபாட்டு உடுப்புகளில் மிகப் பொதுவான நிறங்களில் ஒன்றாக இது இருக்கிறது. இது குறிப்பாக இயேசுவின் விழாக்கள், மரியாவின் நினைவுகள், உயிர்ப்பு மற்றும் கிறிஸ்து பிறப்பு காலங்களோடு தொடர்புடையது. இது கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும் அடையாளப்படுத்துகிறது.

*பச்சை* எதிர்நோக்கு, நிலைத்திருத்தல், மற்றும் தொடர்ந்த செவிமடுத்தலின் அடையாளமாக இருக்கிறது. பொதுக்காலத் திருவழிபாடுகளில் பயன்படுத்தப்படும் இந்நிறம், கிறிஸ்துவின் வாழ்வில் இருந்து விசுவாசிகள் கற்கின்ற அன்றாடப் பாதையோடு இணைந்துள்ளது.

*ஊதா* தவம், காத்திருத்தல், மற்றும் புலம்பலோடு தொடர்புடையது. இது திருவருகை மற்றும் தவக்காலங்களில் குறிப்பாகப் பயன்படுத்தப்படுகிறது. இறந்தோருக்கானத் திருப்பலியிலும் ஊதா திருவழிபாட்டு உடுப்புகள் பயன்படுகின்றன, உலகின் சில இடங்களில் இவற்றுக்கு மாற்றாக கருப்பு உடுப்புகள் இடம்பெறுகின்றன.

*சிவப்பு* கிறிஸ்துவின் பாடுகள் மற்றும் அவராலும் புனிதர்களாலும் மறைச்சாட்சியத்தில் சிந்தப்பட்டக் குருதியை அடையாளப்படுத்துகிறது. சிவப்பு தூய ஆவியையும் அடையாளப் படுத்துகிறது. ஆகவே இந்த திருவழிபாட்டு நிறம் குருத்து ஞாயிறு, புனித வெள்ளி, பெந்தக்கோஸ்து, ஆண்டவரின் பாடுகளுக்கு அர்ப்பணிக்கப்பட்டக் கொண்டாட்டங்கள், திருத்தூதர்கள், நற்செய்தியாளர்கள் மற்றும் எல்லா புனித மறைச்சாட்சிகளின் விழாக்களில் பயன்படுத்தப்படுகிறது.

வகுக்கப்படாத நிறங்களில், நீலம் சிறப்பாக பேறுநிறை கன்னி மரியாவைப் பெருமைப்படுத்தும் கொண்டாட்டங்களில் (பெரிதும் ஸ்பெயின் அல்லது போர்த்துகீசியப் பண்பாட்டு நாடுகளில்) பயன்படுத்தப்படுகிறது. இளஞ்சிவப்பு திருவருகை காலத்தின் மூன்றாம் ஞாயிறு (அக்களிப்பு ஞாயிறு) மற்றும் தவக்காலத்தின் நான்காம் ஞாயிறு (களிகூரல் ஞாயிறு) நாட்களில் பயன்படுத்தப்படுகிறது, ஏனெனில் இது களிப்பு மற்றும் தீவிரத்தைக் குறிக்கிறது. பொன்னிறம் அரசுரிமை மற்றும் விழாவை அடையாளப்படுத்துகிறது, மேலும் வழக்கமாக மிக முக்கியப் பெருவிழாக்களில் மட்டுமே பயன்படுத்தப்படும் என்றாலும், ஒவ்வொரு வாய்ப்பிலும் எல்லா நிறங்களையும் இதைக்கொண்டு மாற்றலாம்.

11. கத்தோலிக்கர்களாக, நாம் திருவழிபாட்டு வாழ்வை வாழ முயற்சிப்பது நமக்கு முக்கியம். திருவழிபாட்டு வாழ்வை வாழ்வது என்றக் கருத்து ஒரு புதினமன்று; பல புனிதர்கள் இதைக் குறித்து பேசியுள்ளனர். திருவழிபாட்டு வாழ்வை வாழ்வது என்பதற்கு ஒருவரது ஆன்மிக வாழ்வை திருவழிபாட்டுப் பருவங்கள் மற்றும் திருச்சபையின் திருவழிபாட்டு ஆண்டின் விழாக்களோடு இசைவாக வைத்திருத்தல் என்று பொருளாகும். அதாவது திருவழிபாட்டு ஆண்டு முழுவதும் அன்றாட அடிப்படையில் திருச்சபையோடு இணைந்து பயணிக்க வேண்டும். தெளிவாக திருப்பலியே இதில் சிகரமாக இருக்கிறது. ஆனால் அதே நேரத்தில், திருவழிபாட்டு வாழ்வை வாழ்வது அடிக்கடி திருப்பலியில் மட்டும் பங்கேற்பதை விட மேலானது. இதற்கு ஒவ்வொரு திருவழிபாட்டு பருவம் மற்றும் திருச்சபையின் திருவழிபாட்டு நாள்காட்டியின் விழாவை அன்றாட அடிப்படையில் அணுகுவது தேவையாகிறது.

12. நமது சொந்த ஆன்மிக வாழ்வை திருவழிபாட்டு பருவங்கள் மற்றும் திருச்சபையின் விழாக்களோடு இணைப்பதில், நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து, அவரை வெற்றிகரமாக பின்பற்றியப் புனிதர்கள் ஆகியோரின் வாழ்வு, மேலும் இறை உண்மைகள் மற்றும் கடவுள் நம்மீது பொழிந்த புனித மறைபொருள்கள் மீதான ஆழ்ந்த சிந்தனையில் நாம் ஈடுபடுகிறோம். இதற்குள் நம்மை ஆழமாக இழுக்க மூவொரு கடவுளின் வெளிப்பாடு மற்றும் அவர் நிறுவியத் திருச்சபையோடு நாம் நெருக்கமான தொடர்புக்குள் நம்மைக் கொணர வேண்டும். நமது ஆன்மிக வளர்ச்சிக்கு இது மட்டுமே நமக்கு உதவ முடியும். கத்தோலிக்கத் திருச்சபையின் பொது திருவழிபாட்டு வாழ்வு நூற்றாண்டுகளாகத் தூய ஆவியரால் வழிநடத்தப்படுகிறது; இது பல புனிதர்களை உருவாக்கியுள்ளது. இதுவே ஆன்மிக வாழ்வில் நமக்கு மிக உறுதியான, திடமான, மற்றும் விரிவான வழிகாட்டியாக இருக்கிறது.

13. எல்லா கடன் திருநாள்களிலும் திருப்பலியில் பங்கேற்பது திருவழிபாட்டு வாழ்வில் மிக முக்கிய நடைமுறையாக இருக்கிறது. வாய்ப்புள்ள போதெல்லாம், அன்றாடத் திருப்பலியில் பங்கேற்பது சிறப்புக்குரியதாக இருக்கும்.

அதை நெருக்கமாகத் தொடர்வது முறைநேர வழிபாடு (திருப்புகழ்மாலை) அல்லது இறை அலுவல் ஆகும். பங்கு ஆலயத்துக்கு வெளியே நமது வாழ்வுக்குள் திருச்சபையின் திருவழிபாட்டைக் கொணர்வதில் முறைநேர வழிபாடு பயனுள்ளதாக இருக்கும். காலையில் இருந்து இரவு வரை, இது நமது நாட்களை திருச்சபையின் திருவழிபாட்டு விழாக்கள் மற்றும் பருவங்களால் நிரப்ப உதவுகிறது. நம்மில் பலரும் துறவுமடங்களில் செபிப்பது போன்று நாள்தோறும் அதிக நேரம் ஒதுக்க இயலாத நிலையில், இதைச் செய்ய சிறிது நேரமாவது நாம் கண்டடையச் சாத்தியமுள்ளது. திருப்பலி மற்றும் முறைநேர வழிபாடு இரண்டுமே திருச்சபையின் முறையான திருவழிபாட்டின் பகுதியாக இருக்கிறது, இத்தகையவற்றுக்கு ஒரு கத்தோலிக்கரின் ஆன்மிக வாழ்வில் உயர்ந்த முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

(இந்த பாடம் முறைநேர வழிபாட்டை எப்படி செபிப்பது என்று உங்களுக்குக் கற்றுத்தராது, ஆனால் நீங்கள் அதைச் செய்ய விரும்பினால் Universalis/Catholic Calendar மற்றும் iBreviary போன்ற செயலிகளில் முறைநேர வழிபாடு கிடைக்கும். இந்த பாடத்திட்டத்தின் பிற்பகுதியில், முறைநேர வழிபாட்டை எப்படி செபிக்க வேண்டும் என்பதை கற்பிக்கும் ஒரு பாடம் இருக்கிறது.)

14. உண்மையில் திருச்சபையின் திருவழிபாட்டு வாழ்வோடு நம்மை ஒன்றிக்கும் மற்ற வழிகளும் இருக்கின்றன. திருவழிபாட்டு பருவத்தோடு இசைந்த பக்தி முயற்சிகள் அல்லது ஆன்மிக வாசகங்களை ஒருவர் தேர்வு செய்யலாம். நமது ஆண்டவரின் பாடுகளைத் தியானிக்கும் இறை இரக்கத்தின் செபமாலை, அல்லது கிறிஸ்துவின் வாழ்வின் பல்வேறு மறைபொருள்களைத் தியானிக்கும் செபமாலையை ஒருவர் செபிக்கலாம். அன்றைய நாளின் புனிதரது வாழ்வு குறித்தும் நாம் வாசிக்க வேண்டும்.

15. நாம் உடலேற்ற விசுவாசத்தை வாழ்கிறோம்; அது அடையாளங்கள் மற்றும் சடங்குகள் நிறைந்தது. ஆகவே இவற்றில் பெரும்பாலானவற்றை நமது சொந்த இல்லங்களுக்கு நம்மால் இழுக்க முடியும். நமது இல்லங்களில் பீடங்களை அமைக்கும் வழக்கத்தை நடைமுறையாக்க வேண்டும். அது இதற்காக ஒதுக்கப்பட்ட ஓர் அடுக்கமாக, ஓர் உறையமாக, அல்லது ஒரு சிறு மேசையாக இருக்கலாம். அதன்மீது ஒரு சுரூபம், ஒரு படம் அல்லது ஒரு திருச்சிலுவை, செப வேளையில் ஏற்றுவதற்கான மெழுகுதிரிகள் மற்றும் ஊதுபத்தியோடு இருக்க வேண்டும். குறிப்பிட்ட புனிதர்கள் அல்லது விழா நாட்களுக்கான தூயப் படங்களை வைத்திருந்தால் அதற்குரிய நாட்கள் மற்றும் பருவங்களில் நீங்கள் அவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். பெருவிழாக்கள் அல்லது புனித புரவலருக்குரிய (பாதுகாவல் புனிதர்) நாட்களில் நீங்கள் அவற்றை மலர்களால் அலங்கரிக்கலாம். இந்த தூய நினைவூட்டல்கள் நமக்கு முன் புனித உணர்வைத் தொடரச் செய்யும். இதன் வழியாகவும், திருச்சபையின் வாழ்வு நமது அன்றாட வாழ்வில் உடலேற்கிறது, அதனால் நமது மதச்சார்பற்ற வாழ்வை வாழ்வதில், நாம் தூய கத்தோலிக்கத் திருச்சபையின் வாழ்வின் ஒரு பகுதியாகத் தொடர்கிறோம் என்பதை நாம் மறக்கமாட்டோம்.

(11 முதல் 15 வரையான கருத்துகள் *தி கத்தோலிக் ரெஸ்பான்ஸ்* 2005 கோடை இதழில் ஷாவ்ன் ட்ரைப் எழுதிய “திருவழிபாட்டு வாழ்வை வாழ்தல்” என்பதிலிருந்து எடுக்கப்பட்டவை.)